**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No. 40/2018**

**Date**: 23.07.2025.

வா.சா.1 - திருமதி மேரி செலின்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1ம் பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்தினை அதன் வரம்பிற்கு உட்பட்ட குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில், ஆவணங்களை சரிபார்த்து பதிவு செய்து 2ம் பிரதிவாதியிடமிருந்து விலை கிரையம் பெற்றார் என்றால், பதிவு செய்திருக்கிறது, ஆனால் முந்தைய ஆவணம் போலியானது. பதிவு செய்த ஆவணத்தின் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்தை கைவசம் வைத்து அனுபவம் செய்துவருகிறார் என்றால், அந்த ஆவணம் செல்லாது என்று சாட்சி கூறுகிறார். 1ம் பிரதிவாதி அத்துமீறி நுழைந்ததாக வழக்கிற்காக தவறுதலாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. அது அவருக்குரிய சொத்து என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி வாங்கிய சமயத்தில் காலி மனை என்றாலும், தற்போது அதில் வீடு உள்ளது என்றாலும், அத்துமீறி பஞ்சாயத்தில் அனுமதி வாங்கி வீடு கட்டியிருக்கிறார். அந்த வீட்டின் கதவு எண்.11/82 டி–3 என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. பின்னிட்டு சாட்சி வீட்டு கதவு எண் தெரியாது என்கிறார். முறையான அரசுஅதிகாரிகளின் அனுமதி பெற்று வீடு கட்டி 1ம் பிரதிவாதி அதில் குடும்பத்துடன் குடிவசித்து வருகிறார் என்றால், அத்துமீறி வீடு கட்டினார் என்று சாட்சி மீண்டும் கூறுகிறார். 1ம் பிரதிவாதி வீடு கட்டுவதற்கு பஞ்சாயத்தில் அனுமதி வாங்கியிருக்கிறார் என்றால், சரிதான். தனது மனைவி ஸ்ரீதேவியின் பெயரில் எழுதி அனுமதி வாங்கியிருக்கிறார். இந்த விபரத்தினை நான் எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை

சாட்சியத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–7 புகைப்படங்கள் சிடியுடன் கூடியது இந்த புகைப்படங்கள் நாங்கள் தான் எடுத்தோம். அது எந்த இடத்தில் எடுக்கப்பட்டது என்ற விபரம் துலங்க வில்லை என்றால், சரிதான். அந்த புகைப்படத்தை யார், எந்த ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டது என்று துலங்கவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ–7 புகைப்படங்கள் நீதிமன்ற ஆணையரால் எடுக்கப்படவில்லை என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி பெயருக்கு 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த விலை பத்திர ஆவண எண். என்னவென்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. அந்த ஆவண எண்ணை பற்றி எனது வழக்குரை மற்றும் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல, ஆவணத்தினை பற்றி வழக்கில் கூறியிருக்கிறேன். அவ்வாறு நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு அவரின் தந்தை ஜோசப் சிறில் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. அந்த ஆவண எண் 1427/ 2010 தேதி 01.07.2010 ஆகும். அந்த ஆவண எண்.1497/2010 என்றால், சரியல்ல. ஆவணத்தினை பற்றி எனக்கு தெரியாத காரணத்தால் ஆவண எண்ணை தவறாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. ஆவண எண்.1497/2010 ன் படி 2ம் பிரதிவாதிக்கு இரண்டு சொத்துகள் கிடைத்தன, அது என் சகோதரர் போலியாக எழுதிக்கொடுத்தது. அந்த சொத்துகளின் சர்வே எண்.322/13, 342/1 ஆகும். அதன் படி 2ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.322/13ல் 14 சென்ட் சொத்து கிடைத்தது. 14 சென்டில் 2ம் பிரதிவாதி, 6 சென்டினை ஜெயசேகரனுக்கும், அதில் 5 சென்டை ஜெயசேகரன் ஸ்ரீதேவிக்கு விலைக்கு கொடுத்தார். மீதம் உள்ள 8

சென்டை ஜெயசந்திரன், மரிய அந்தோணிக்கு கொடுத்திருக்கிறார்கள். 2ம் பிரதிவாதி பால்ராஜ்க்கு 5 சென்டும் ராஜேஸ்க்கு 3 சென்டும் குளச்சல் சார்பதிவாளர் அலுலவகத்தின் மூலமாக விலை கிரையம் செய்திருக்கிறார் என்றால், தினமும் மாற்றி எழுதுகிறார்கள். 2ம் பிரதிவாதி அவரின் சொத்தினை மொத்தம் 3 பேருக்கு கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால், போலி ஆவணம் என்பதால் மாற்றி மாற்றி எழுதுகிறார்கள். அவ்வாறு போலி ஆவணம் எதுவும் எழுதவில்லை என்றாலும், 3 நபர்களில் நான் ஒருவருக்கு எதிராக மட்டும் தான் வழக்கு செய்கிறேன் என்றாலும், சரியல்ல. சர்வே எண்.322/13 ல் ஜோசப் சிறில் , அஸ்வினி குமாரியை தவிர அஸ்வந் குமாருக்கு கொடுத்திருக்கிறார். அஸ்வந் குமாருக்கு வழக்கு சொத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், மரிய அந்தோணி, ஜெயசந்திரனுக்கு தான் ஏழுதிக்கொடுத்திருக்கிறார் என்றாலும், நான் ஏற்கனவே சொன்னேன். வருவாய் துறை ஆவணங்களின் படி சர்வே எண்.322/13, வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரண்ம் 24 ஏர் அதாவது 60 சென்ட். அது 16 ஏர் 40 சென்ட் என்றால், சரியல்ல. 24 ஏருக்கான பட்டா அல்லது சிட்டா போன்ற ஆவணங்களை என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. உண்மையான பரப்பளவு , பட்டா, விற்பனை செய்த விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. நான் சொல்வதுபோல 60 சென்றில் 6 சென்றிற்கு மட்டும் தான் வழக்கு செய்கிறேன் என்றால், சரிதான். முந்தின வழக்கில் தாக்கல் செய்திருந்தேன் என்று சாட்சி சொல்கிறார். முந்தின வழக்கில் ஜோசப் சிறில், மரிய அந்தோணி, ஜெய சந்திரன் , அஸ்வினி குமாரி, அஸ்வந் குமார் மீது வழக்கு செய்தேன். அது அ.வ.எண்.143/2013 ஆகும். அது தற்போது நிலுவையில் உள்ளதா என்றால், அது எனக்கு தெரியாமல்

தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதற்கு எதிராக நான் மேல்முறையீடு தாக்கல் செய்ய வில்லை என்றால், இந்த வழக்கு இருப்பதால் மேல்முறையீடு செய்யவில்லை. 1ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதி பெயரில் மட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதற்கு பிரத்தியேகமான காரணங்கள் எதுவும் இல்லை. ரீ சர்வே எண்.322/13 ன் படியான சொத்திற்கு என் பெயரில் கரதீர்வை அல்லது வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் என் கைவச அனுபவம் இல்லை என்றால், 2004 வரை கரதீர்வை செலுத்தி, ரசீது தாக்கல் செய்திருக்கிறேன். 2013 ரசீது தாக்கல் செய்திருக்கிறேன். தற்போது எனக்கு பட்டா இல்லை. அதுபற்றிய வில்லங்கம் எடுத்து பார்த்தேன். சமீபகாலத்தில் பார்த்தேன். வில்லங்கத்தில் என் சகோதரருக்கு எழுதிக்கொடுத்தது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.